பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி

சென்னை - 4

15 08 2025 7 15

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தென்கொரிய அமைச்சர் திரு. Cho Hyun உடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை, இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

- அமைதியை நிலைநாட்ட அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பும் - ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினும் அலாஸ்காவில் நடத்திய பேச்சுவார்த்தையை இந்தியா வரவேற்றுள்ளது.

- சர்வதேச விண்வெளிப் பயணத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்த இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா இன்று இந்தியா புறப்பட்டார்.

- ஜம்மு-கஷ்மீரில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா அறிவித்துள்ளார்.

- இந்தியாவில் முதல் முறையாக சர்வதேச குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் வரும் 20ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை டேராடூனில் நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தென்கொரிய அமைச்சர் திரு. Cho Hyun உடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை, இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள தென்கொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Cho Hyun உடன் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது வர்த்தகம், உற்பத்தி, கடல்சார் பாதுகாப்பு, இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், செமிகண்டக்டர் உற்பத்தி, தூய்மை எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் புதிய முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தனர்.

இந்தோ - பசிபிக் மண்டலத்தில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழ்நிலை குறித்தும், பாதுகாப்புக்காக மற்ற நாடுகளுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவின் 10வது ஆண்டு நிறைவை ஒட்டி புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் இந்த சந்திப்பின்போது தென்கொரிய அதிபரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

அமைதியை நிலைநாட்ட அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பும் - ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினும் அலாஸ்காவில் நடத்திய பேச்சுவார்த்தையை இந்தியா வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருதரப்பிலும் சுமுகமாக நடத்தப்பட்ட நட்பு ரீதியிலான பேச்சுக்களை இந்தியா மிகவும் பாராட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜ்ஜிய உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்தப் பேச்சு அமைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் யுக்ரைன் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும் என்று ஆவலோடு எதிர்பார்ப்பதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இதனிடையே அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவுகளை யுக்ரைன் ஏற்றுக்கொண்டு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினும் இந்த அமைதிப் பேச்சுவார்த்தையை யுக்ரைன் ஏற்றுக்கொள்ளும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள செய்தியில், அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கியுடன்

தொலைபேசியில் பேசிய பின் நேட்டோ தலைவர்களிடமும் பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் அதிபர் திரு. மாக்ரோன், ஜெர்மன் சான்ஸ்லர் திரு. Merz, இங்கிலாந்து பிரதமர் திரு. ஸ்டார்மர், இத்தாலி பிரதமர் மெலோனி ஆகியோரும் திரு. ஜெலன்ஸ்கியுடன் தொடர்புகொண்டு பேசியுள்ளனர்.

<<<<>>>>

நவ்ரோஸ் புத்தாண்டையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி ஃபார்சி இன மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் நாட்டின் வளர்ச்சிக்கு ஃபார்சி மக்களின் பங்களிப்பு குறித்து பெருமை கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இந்தப் புத்தாண்டு, அனைவருக்கும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நல்ல ஆரோக்கியத்தை வழங்க வாழ்த்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சர்வதேச விண்வெளிப் பயணத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்த இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா இந்தியா புறப்பட்டுள்ளார்.

விண்வெளிப் பயணத்திற்குப் பிறகு அவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ ஓய்வுக்குப் பிறகு இன்று அமெரிக்காவில் இருந்து புறப்பட்டுள்ளார்.

நாளை இந்தியா வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் தமது பயணத்தை தொடங்கும் முன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இந்தியாவில் உள்ள தமது குடும்பத்தினரையும், நண்பர்களையும் சந்திப்பதை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்த இந்திய விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள சுபான்ஷு சுக்லா, ககன்யான் விண்வெளிப் பயணத் திட்டத்தில் முதல் விண்வெளி வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ககன்யான் விண்வெளிப் பயணம் இந்த ஆண்டு இறுதியில் தொடங்க உள்ளது.

<<<<>>>>

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில் மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் 4 இடங்களிலும், சென்னை கிரீன்வேஸ் சாலையிலும் இந்த சோதனைகள் நடைபெற்றன.

இந்த சோதனையின்போது அமலாக்கத்துறையினர் பல்வேறு ஆவணங்களை கைப்பற்றியுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் திரு. ஐ. பெரியசாமிக்கு சொந்தமான இடங்களில் தொடர்ந்து சோதனை நடைபெற்று வருகிறது.

அவருக்கு சொந்தமான கார்களிலும் இந்த சோதனை நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா அறிவித்துள்ளார்.

இதன்படி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிஷ்துவார் பகுதியில் உள்ள Chashoti கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து திரு. உமர் அப்துல்லா ஆறுதல் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள மூத்த ராணுவ அதிகாரிகள், மீட்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அவரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

இந்தியப் பொருட்கள் மீதான இறக்குமதி வரியை அமெரிக்கா உயர்த்தியுள்ளதால் தமிழகத்தின் தொழில் மற்றும் வர்த்தக துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட 52

புள்ளி ஒரு பில்லியன் டாலர் மதிப்பிலான பொருட்களில் 31 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிகமாக சார்ந்திருப்பதால் இறக்குமதி வரியின் தாக்கம் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில்தான் அதிகம் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூடுதல் வரி விதிப்பு மாநிலத்தின் உற்பத்தி துறை மற்றும் வேலைவாய்ப்பில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தின் உற்பத்தி துறை ஒரு நெருக்கடியான சூழ்நிலையை தற்போது எதிர்கொண்டிருப்பதாகவும், தொழில்துறையில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் நோக்கில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

**<<<<>>>>**

ஆஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் பாப் சிம்சன் இன்று சிட்னியில் காலமானார். அவருக்கு வயது 89.

சிறந்த பேட்ஸ்மேனாகவும், ஃபீல்டராகவும், சுழற்பந்து வீச்சாளராகவும் விளங்கிய பாப் சிம்சன், ஆஸ்திரேலிய அணிக்கு பலமுறை வெற்றி தேடித்தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1957ஆம் ஆண்டு முதல் 1978ஆம் ஆண்டு வரை 62 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சுமார் 5 ஆயிரம் ரன்களை அவர் குவித்துள்ளார்.

சிறந்த கிரிக்கெட் வீரராக தமது முத்திரையைப் பதித்து விடைபெற்ற சிம்சன், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

**<<<<>>>>**

இந்தியாவில் முதல் முறையாக சர்வதேச குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் வரும் 20ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை டேராடூனில் நடைபெறுகிறது.

இந்தியா, சீனா, ஜப்பான், ஹாங்காங், இந்தோனேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 11 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

தடகள வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் 9 வகையான குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

ஆஸ்திரேலியா ஓபன் டேக்வாண்டோ போட்டியில் இந்தியாவின் Nitesh தங்கப் பதக்கம் வென்றார்.

Carrara-வில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் Shivans, Regi மற்றும் Rodali ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றர்.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 4-6, 12-10 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் Patric Harper - தாய்லாந்தின் Pruchya Isaro இணையை வென்றது.

-------------

ஸ்வீடனில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனுஷ் ஷா, Yashaswini Gorpade ஆகியோர் வெற்றி பெற்றனர்.

-------------

Perth-ல் இன்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது.

<<<<The End>>>>